பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 12 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அந்நிய செலாவணி கையிருப்பில் இந்தியா நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.
2. ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்திலிருந்து **SDX-01** மற்றும் **SDX-02** செயற்கைக் கோள்கள் இன்று இரவு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.
3. தமிழகத்தில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.
4. பஞ்சாப் மாநிலத்தில் 30 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.
5. இந்தியா-வுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 184 ரன் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அந்நிய செலாவணி கையிருப்பில் இந்தியா உலக அளவில் நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நடப்பு ஆண்டில் இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 700 பில்லியன் டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் நேரடி அந்நிய முதலீடு 709 டாலர் அளவுக்கு அதிகரித்துள்ளது.

2014-ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி கையிருப்பில் 71-வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாடு, சந்தை விரிவாக்கம் மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் நடைமுறைகள் காரணமாக பொருளாதார ரீதியாக இந்தியா இந்த சாதனையை படைத்துள்ளது.

தற்போது உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக விளங்கும் இந்தியா மூன்றாவது இடத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதாக எமது தில்லி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

விவசாயத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை பயன்படுத்துவதன் மூலம், மகசூல் அதிகரிப்பதாகவும், அதனால் விவசாயிகள் இரட்டிப்பு வருமானம் ஈட்டி வருவதாகவும் அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சூரிய மின்சக்தி சாதனங்களை வேளாண் துறையில் பயன்படுத்துவதன் காரணமாக இம்முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திரிபுராவின் **Sepahijala** மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ள தனியார் நிறுவன உத்தரவாதத் திட்டத்தின்கீழ், வடகிழக்கு மாநிலங்களில் தானிய சேகரிப்பு அதிகரித்துள்ளதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

விண்வெளியில் விண்கலங்களை இணைத்தல் மற்றும் பிரித்தல் தொடர்பான சோதனைகளுக்கான இந்தியாவின் **SDX-01** மற்றும் **SDX-02** ஆகிய இரண்டு செயற்கைக் கோள்கள் **PSLV C-60** ராக்கெட் மூலம் இன்றிரவு மணி 9.58-க்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்திஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து செலுத்தப்படும் இந்த சிறிய வகை செயற்கைக் கோள்கள், பூமியிலிருந்து 470 கிலோமீட்டர் உயரத்தில் வெவ்வேறு சுற்றுவட்ட பாதைகளில் நிலை நிறுத்தப்படும்.

**SDX-** விண்வெளி பயணத்திட்டம் இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் முக்கிய மைல் கல்லாக விளங்குகிறது.

சந்திரனில் உள்ள மண் மற்றும் பாறைகளை பூமிக்குக் கொண்டு வந்து ஆய்வு மேற்கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரனின் மேற்பகுதியில் இந்தியா சார்பில் அமைக்கப்பட உள்ள பாரதீய அந்தரிக்ஷ ஆய்வு மைய திட்டத்திற்கும், **SDX-** விண்வெளித் திட்டம் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

விண்வெளியில் செயற்கைக்கோள் பராமரிப்புக்கான ஆய்வகம் அமைக்கும் தொழில்நுட்பத்தை அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் மட்டும் செயல்படுத்தி வந்துள்ள நிலையில், தற்போது இந்தியாவும் இணைந்துள்ளது.

விண்வெளியில் நிறுத்தப்படும் விண்கலத்திற்கு மின்சாரத்தை செலுத்துவது உள்ளிட்ட முக்கிய பணிகளை இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ள இஸ்ரோ முடிவு செய்துள்ளது,

**SDX-01** மற்றும் **SDX-02** செயற்கைக் கோள்களில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிக திறன் கொண்ட கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளதாகவும், இதனால் படங்கள் மிகத் துல்லியமாக கிடைக்கும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பஞ்சாப் மாநிலத்தில் 30 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

குழந்தைகள் மேம்பாட்டிற்கான தன்னார்வ அமைப்பு ஒன்று அளித்த புகாரின் பேரில் பஞ்சாப் மற்றும் பீகார் காவல்துறையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் பல்வேறு பண்ணைகளில் பணி புரிந்து வந்த இந்த கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இவ்வாறு பணியில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் 16 வயதுக்கு உட்பட்ட குழந்தை தொழிலாளர்கள் என்றும் காவல்துறை கூறியுள்ளது.

சம்பந்தப்பட்ட பண்ணை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதகாவும் பஞ்சாப் காவல்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

2024-ஆம் ஆண்டின் நினைவலைகள் என்ற தலைப்பில் எமது புதுதில்லி ஆகாஷவாணி செய்திப் பிரிவு சிறப்பு நிகழ்ச்சியை நாளை இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பவுள்ளது.

கடந்த ஓராண்டில் நாட்டில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள், அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்கள், விண்வெளி சாதனைகள், உள்ளிட்ட பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கி இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எப் எம் கோல்டு அலைவரிசையில் நாளை இரவு எட்டு மணி முதல் 8-30 வரை ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை ஆகாஷவாணியின் நியூஷ் ஆன்ஏர் மற்றும் யூ-டியூப் சேனல்களிலும் கேட்கலாம்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியை தொடரும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தூத்துக்குடியில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், உயர்கல்வியில் சேராத பெண்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலை உருவாக்கப்படும் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -50----- செகண்ட்*

இதனைத் தொடர்ந்து கன்னியாகுமரி செல்லும் முதலமைச்சர் அங்கு இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கடலில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வெள்ளி விழா கொண்டாட்டத்தில் பங்கேற்கிறார்.

திருவள்ளுவர் சிலையை சுவாமி விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் வகையில் 37 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்து வெள்ளிவிழா சிறப்பு மலரரையும் திரு மு க ஸ்டாலின் வெளியிடுகிறார்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் கண்காட்சியையும் திறந்து வைக்கும் அவர், திருவள்ளுவர் தோரண வாயிலுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

அத்துடன் திருக்குறள் நெறிபரப்பும் 25 பேருக்கு சிறப்பு பரிசுகளையும் திரு மு க ஸ்டாலின் வழங்குகிறார்.

**[]<<<>>>[]**

பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் பல திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரை தொள்ளாயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பெண்கள் சுயமாக தொழில் தொடங்கி தங்களது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

[]<<<>>>[]

தலைநகர் தில்லி மற்றும் வட மாநிலங்களில் மேலும் மூன்று நாட்களுக்கு கடும் குளிர் நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீரின் ஒருசில பகுதிகள், லடாக், பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய இடங்களில் கடும் குளிர் நிலவும் என்றும், இமாச்சல பிரதேசத்தின் ஓரிரு இடங்களில் மிக அதிக அளவில் குளிர் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா, பஞ்சாப், இமாச்சல பிரதேசம், உத்திரபிரதேசம், ராஜஸ்தான், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு காலை நேரத்தில் கடுமையான பனிமூட்டம் காணப்படும் என்றும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்திரபிரதேசத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஆறு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, தில்லி, ராஜஸ்தான் மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை மூன்று முதல் நான்கு டிகிரி வரை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இரண்டு டிகிரி வரை வெப்பநிலை குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

இந்தியா-வுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 184 ரன் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ளது.

மெல்போர்னில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று 340 ரன் என்ற இலக்குடன் விளையாடிய இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 155 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 474 ரன்னும், இரண்டாவது இன்னிங்ஸில் 234 ரன்னும் எடுத்திருந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 369 ரன்னும், இரண்டாவது இன்னிங்ஸில் 155 ரன்னும் எடுத்தது.

ஐந்து போட்டிகள் கொண்ட இந்த தொடரில் ஆஸ்திரேலியா இரண்டு- ஒன்று என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

கடைசி டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் மூன்றாம் தேதி சிட்னியில் தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சந்தோஷ்கோப்பை கால்பந்து போட்டியில் இறுதி ஆட்டத்திற்கு வெஸ்ட் பெங்கல் அணியும் - கேரள அணியும் தகுதி பெற்றுள்ளன.

ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்ற சர்வீசஸ் அணிக்கு எதிரான அரை இறுதி ஆட்டத்தில் வெஸ்ட். பெங்கால் அணி நான்கு - இரண்டு என்ற கோல் கணக்கில் வென்று 47-வது முறையாக இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் கேரள அணி ஐந்து – ஒன்ற என்ற கோல் கணக்கில் மணிப்பூர் அணியை வென்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஹைதராபாத்தில் நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் வெஸ்ட் பெங்கால் அணி – கேரள அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் உத்திரபிரதேச அணி – வேதாந்தா கலிங்கா லான்சஸ் அணியை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

தேசிய ஆடவர் கைப்பந்து சாம்பினயன்ஷிப் பட்டத்தை கேரள அணி வென்றுள்ளது.

இறுதிப்போட்டியில் அந்த அணி சண்டிகா் அணியை 34-31 என்ற புள்ளி கணக்கில் வென்று கோப்பையை கைப்பற்றியது.

கேரள அணி முதல் முறையாக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

***<u>End of News</u>***